**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 51/2022 (C/W OS. 268/2022)

பெயர் : வைத்தியநாதன் (DW1) (Cross Continuation)

த/க/பெ. :

தேதி :25.11.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் முதலில் வழக்கு தாக்கல் செய்த தேதி நினைவில்லை. நான் முதலில் வழக்கு தாக்கல் செய்து அது நீதிமன்றத்தால் 06.09.20185 ம் தேதியில் திருப்பட்டது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. எந்த தேதியில் திருப்ப பட்டது என்பது தெரியவில்லை என்பதால் எப்போது மீண்டும் தாக்கல் செய்தேன் என்பது எனக்கு தெரியவாய்ப்பில்லை என்றால் நினைவில்லை. நான் தாக்கல் செய்த வழக்கில் 5 முதல் 8 பிரதிவாதிகள் வருவாய் துறையினருக்கு எதிராக பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றம் குறிப்பிட்ட விபரங்களை சரிசெய்யாமல் பிராதை மீண்டும் தாக்கல் செய்தேன் என்றால் தெரியவில்லை. IA. No. 1126/2018 நாள் 01.02.2020 ம் தேதி இடைக்கால தடை உத்தரவு என்றால் சரிதான். அதில் 5 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த உத்தரவும் பிறப்பிக்க படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 3 - 12.09.2018 ல் வருவாய் துறை வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான். அதற்கு முன்பு தடை உத்தரவு மனு கொடுத்துள்ளோம். OS. 51/2022 வாதிகள் எவ்விதமான ஆவணமும் பதிவு செய்யக்கூடதென்று நீதிமன்றத்தில் இடைக்கால தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. எனக்கு வழங்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவிற்கு எதிராக இவ்வழக்கின் வாதிகள் மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அந்த விபரம் தெரியவில்லை. செட்டில் மெண்ட் ஆவணம் தவிர வேறு பதிவு ஆவணம் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பட்டா தாக்கல் செய்துள்ளேன். அது சுப்பிரமணியனுக்கு வழங்கப்பட்ட பட்டா. பட்டா விசாரணை அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக குடும்பத்தில் தாத்தா இறந்துவிட்டால் அவர் எவ்வித ஆவணமும் எழுத வில்லை எனில் அந்த சொத்து

வழி வழியாக குடும்ப சொத்தாக வரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 – 1922 ல் ஏற்பட்ட பதிவு ஆவணத்தை மறுக்கும் வண்ணம் வேறு எதுவும் பதிவு செய்யப்பட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் வில்லங்கம் பார்த்த போது வில்லங்கத்தில் வரவில்லை. வில்லங்க சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துளேன். வா.சா.ஆ. 2- 20.12.2014 ல் வட்டாட்சியர் மேலெழுத்தில் என் பெயரோ, சுப்பிரமணியன் பெயரோ குறிப்பிடபடவில்லை என்றால் அதற்கு நாங்கள் பொறுப்பில்லை. வா.சா.ஆ. 19- வில்லங்கச்சான்று எந்த வருடத்திற்குரியது என்றால் அது எங்கள் சொத்துக்குரிய வில்லங்கசான்று இல்லை. நத்தம் புல எண் வழக்கு சொத்திற்கும் வில்லங்க சான்றிதழிலும் வேறுபட்டு உள்ளது. அதில் பழைய புல எண். 591 எ 18 என்று உள்ளது என்றால் அது வழக்கு புல எண் இல்லை. ஆனால் ஆவணத்தில் அவ்வாறு உள்ளது என்றால் வழக்கு புல எண் இல்லை என்பதால் நான் பதில் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. வா.சா.ஆ. 20- 1945 முதல் 1964 வரையிலான வில்லங்கசான்று புல எண். 134 ல் உள்ளது ஆனால் புல எண். 591 வழக்கு சொத்து இல்லை. வா.சா.ஆ. 19 ல் புல எண் 134 உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 21- வில்லங்கசான்றில் மனையின் விஸ்தீரண அளவு மாறுபடுகிறது வழக்கு சொத்திற்கு சம்பந்தம் இல்லாதது. அதில் புல எண் 134 உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 22- 1987 முதல் 2000 வில்லங்கசான்று புல எண் 134 உள்ளது என்றால் சரிதான். வா.ச.ஆ. 19 முதல் 22 ல் எந்த வில்லங்கமும் காணப்படவில்லை என்றால் சாட்சி அதற்கு பதில் சொல்லவில்லை மீண்டும் எங்கள் வில்லகசான்று 1971 அந்த வில்லங்கசான்றிதழுக்கும் இந்த வில்லகசான்றிதழுக்கும் மாறுபாடு உள்ளது என்று கூறுகிறார். வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்றால் வழக்கு கோப்பினை பார்த்தால் தான் தெரியும். எங்கள் கோப்பை பார்த்தால் தெரியும். வா.சா.ஆ. 18- மாவட்ட பதிவாளரின் பதிவு என்றால் மாவட்ட பதிவாளரின் பதிலில் உரிய நீதிமன்றத்தை அனுகுமாறு அதற்கு நான் மேல் முறையிடு செய்துள்ளேன். எங்கு மேல் முறையீடு செய்துள்ளேன் என்பது நினைவில்லை. விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்ற விபரத்தை என் எதிர் வழக்குரையில் சொல்லவில்லை. பி. வா.சா.ஆ. 2- ல் செட்டில் மெண்ட் ஆவணத்தில் என் சகோதரர் பெயரில் உள்ள பட்டா இல்லை என்றால் சாட்சி ஒருவேலை அந்த ஆவணத்தின் பட்டா இல்லை என்றால் திரும்ப அந்த ஆவபணத்தைதாக்கல் செய்வதாக கூறுகிறார். பட்டா உள்ள ஆவணத்தை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். இந்திய குடிமகன் இந்தியாவிற்கு எங்கு வேண்டுமானாலும் சொத்து வாங்கலாம் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.